# மேசியாவைப் பற்றிய செய்திகள்

தீர்க்கதரிசனப் புத்தகங்கள் எதையும் விட ஏசாயாவின் புத்தகத்தில் மேசியாவைப் பற்றிய தீர்க்க தரிசனங்கள் அதிகமாகக் காணப்படுகிறது. மற்ற எல்லா பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளையும் விட ஏசாயாவைப் பற்றி புதிய ஏற்பாட்டில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏசாயாவின் புத்தகத்தை வாசிக்கும்போது அவருடைய பிரசங்கத்தில் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களைக் காணுங்கள். மேசியா வரும்போது அவர் எந்தப் பெயர்களால் அழைக்கப்பட வேண்டும் என்ற இந்தத் தீர்க்கதரிசனத்தை நீங்கள் ஏசாயாவில் காண்பீர்கள்: “அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்” (எசாயா 9:6). மேசியா என்பவர் மனித மாம்சத்தில் தேவன் இருப்பார் அல்லது “தேவன் நம்மோடிருக்கிறார்” என்ற அர்த்தமுடைய “இம்மானுவேல்” என்பதை ஏசாயா தெளிவாக்கியிருக்கிறார் (மத்தேயு 1:23).

இன்னும் மேசியா வரும்போது அவர் மூலமாக வெளிப்படுத் தப்படும் ஆவியானவரின் முக்கியத்துவத்தைக் குறித்தும் ஏசாயா நமக்குச் சொல்லியிருக்கிறார்: “ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்” (ஏசாயா 11:1-2). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இது “தேவனுடைய ஏழு ஆவிகள்” என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (வெளி. 3:1, 4:5, 5:6).

வேதாகமத்தில் ஏழு என்ற எண் பூரணத்தைக் குறிப்பிடுவதாக

இருப்பதால், ஏசாயா வரும் மேசியாவைப் பற்றி நமக்குச் சொல்லுவது எதைக் குறிக்கிறதென்றால், "மேசியா தேவனுடைய ஆவியின் பூரண வெளிப்பாடாக இருப்பார்" என்பதே. இந்த ஏழு வழிகளில் மேசியா ஆவிக்குரிய சாராம்சத்தை வெளிப்படுத்துவார். அவருடைய வாழ்க்கையிலிருந்து அறிவின் ஆவியும், உணர்வின் ஆவியும், ஞானத்தின் ஆவியும், ஆலோசனை அருளும் ஆவியும், பெலனை அருளும் ஆவியும், ஆராதிக்கும் ஆவியும், கர்த்தருடைய ஆவியும் வெளிவரும்.

நான்கு சுவிசேஷங்களையும் நீங்கள் வாசிக்கும்போது, எந்த மாதிரியான இயேசுவின் ஒரு சித்திரம் உங்கள் மனதில் உருவாகுகிறது? ஏசாயாவின் கருத்துப்படி மேசியா இப்படி இருப்பார் (இருந்தார்): அவருடைய வாழ்க்கை அறிவின் ஆவியையும் உணர்வின் ஆவியையும் வெளிப்படுத்தும். அவர் தேவனுடைய வசனங்களைப் பூரணமாகத் தெரிந்துகொண்டு உணர்ந்து கொள்ளுவார். ஞானத்தின் ஆவி என்பது அறிவை வெளிப்படுத்துதல். அதனால் இயேசு தேவனுடைய வசனங்களைத் தம்முடைய வாழ்க்கையிலும், மற்றவர்களுடைய வாழ்க்கைகளிலும் செயல்படுத்தும்போது அவர் ஞானத்தின் ஆவியையும் செயல்படுத்துவார். இதன் அர்த்தம் அவர் ஆலோசனையின் ஆவியையும் செயல்படுத்துவார். அவர் அப்படிச் செய்யும்போது, அவருடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும், வாழ்க்கையை மாற்றும் வல்லமை வந்து, வல்லமையையும் பெலனையும் அருளுள் ஆவியை செயல்படுத்தும்.

கடைசியாக ஏசாயா, மேசியா ஆராதனையின் ஆவி அல்லது கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தின் ஆவியை வெளிப்படுத்தி செயல்படுத்துவார் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். தாம் ஆராதனையின் ஆவியாகிய இந்தக் கடைசி வெளிப்பாட்டில் களிகூருவார் என்று ஏசாயா தம்முடைய வியாக்கியானத்தில் கூடுதலாகச் சொல்லுகிறார். சுவிசேஷங்களை நீங்கள் வாசிக்கும்பொழுது, இயேசு மக்களுக்கு ஊழியஞ்செய்யாமலிருக் கும்போது அவர் தனிமையில் ஜெபித்து ஆராதித்துக் கொண்டிருந்தார் என்று காண்பீர்கள். நான்கு சுவிசேஷங்களையும் வாசித்து, இயேசுவினுடைய வாழ்க்கையில் தேவ ஆவியானவர் நிறைவேற்றிய ஏழு பூரண வெளிப்பாடுகளைப் பாருங்கள்.

இருபதாம் நூற்றாண்டின் கடைசி பாதிப்பகுதியில், பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய உற்சாகமான எழுப்புதல் ஏற்பட்டது. பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய அனுபவங்களைப் பற்றி நாம் அர்த்தம் சொல்லும்போது, பெரிய பிரிவுகளையும் குழப்பத்தையும் நாம் உருவாக்குகிறோம், ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரோடு நமக்கு ஏற்பட்ட அனுபவங்களை நாம் பிரித்தெழுதும்போது நாம் சில

தவறுகளைச் செய்கிறோம். எடுத்துக்காட்டாக, எப்பொழுதாவது ஆவியால் நிறைந்த விசுவாசி, போதகர் அல்லது சபை என்று மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? இதிலுள்ள கருத்து என்னவெனில், இரண்டு விதமான விசுவாசிகள், போதகர்கள் அல்லது சபைகளிருக்கின்றன. ஆவியால் நிறைந்த விசுவாசிகள், போதகர்கள் சபைகள்; ஒருபோதும் ஆவியால் நிறைக்கப்படாத விசுவாசிகள், போதகர்கள், சபைகள்.

வேதாகமம் விசுவாசிகளைப்பற்றி ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் என்று விவரிக்கும்போது அதன் அர்த்தம் இது தானா? வேதம் எல்லா விசுவாசிகளும், ''ஆவியினால் நிறைந்து'' (எபேசியர் 15:8) இருக்கவேண்டும் என்று நமக்குக் கட்டளையிடுகிறது. இது மூலமொழியில், ''ஆவியினால் நிறைந்திருங்கள்'' என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழியில் இது, இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களுக்கான ஒரு கட்டளையாகக் கொடுத்ததைக் காட்டுகிறது.

ஆவியினால் நிறைந்திருப்பது என்றால் என்ன? அப்போஸ்தலர் புத்தகத்தில் பேதுரு, "ஆவியினால் நிறைந்து" பெந்தெகொஸ்தே நாளில் அந்த மிகப்பெரிய பிரசங்கத்தைப் பிரசங்கித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பின்னர் "பேதுரு ஆவியினால் நிறைந்து" மறுபடியும் பிரசங்கித்தான், ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். இன்னும் "பேதுரு ஆவியினால் நிறைந்து'' பல அற்புதங்களைச் செய்தான் என்று வாசிக்கிறோம். பேதுரு ஆவியினால் நிறைந்திருந்தான் என வேதவசனங்கள் நமக்குச் சொன்ன நேரங்கள் தவிர, இடைப்பட்ட நேரங்களில் அவன் ஆவியினால் நிறைந்திருந்தானா?

பரிசுத்த ஆவியானவர் ஒரு திரவமல்ல. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கைகளில் இருக்கிறார் அல்லது இல்லாமலிருக்கிறார். அவ்வளவே. சரியான கேள்வி, ''நமக்குள் எவ்வளவு ஆவியானவர் இருக்கிறார்?'' என்பதல்ல, ''ஆவியானவர் நம்மில் எவ்வளவு பகுதியை வைத்திருக்கிறார்?'' என்பதே. நாம் எல்லாமாக அவருக்குள்ளிருந்தால், அப்போது ஆவியானவரால் நிறைந்திருக்கிறோம்.

ஆவியினால் நிறைந்த ஒரு விசுவாசி, ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கும் ஒரு விசுவாசி. பரிசுத்த ஆவியானவரால் நிறைந்தவர்களாக இருக்கும்படி பவுல் கட்டளையிட்டதற்கு முன் அவர், "மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து'' (எபேசியர் 5:18) இருங்கள் என்று எழுதினார். மதுவருந்திய ஒருவன் மதுபானத்தின்